## இராஜாங்க செயலாளர் மைக்கல் ஆர். பொம்பேயோ மற்றும் இலங்கை வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தன கலந்துகொண்ட ஊடக சந்திப்பு

ஊடகங்களுக்கான உரைகள்

ஒக்டோபர் 28, 2020

**வெளிநாட்டமைச்சர் குணவர்தன:** இராஜாங்க செயலாளர் கௌரவ மைக்கல் பொம்பேயோ அவர்களே, (கேட்கவில்லை) இராஜாங்க அமைச்சர் அவர்களே, தூதுவர் அவர்களே, தூதுக்குழுவின் உறுப்பினர்களே

இராஜாங்க செயலாளர் அவர்களே, (கேட்கவில்லை) இந்த மிதமான மற்றும் இனிமையான காலநிலையில் விஜயத்தை மேற்கொண்டுள்ள தங்களையும், தங்களது தூதுக்குழுவினரையும் முதலில் இலங்கைக்கு வரவேற்க விரும்புகிறேன்.

முன்னர் சிலோன் என அறியப்பட்ட இலங்கை மற்றும் அமெரிக்காவிற்கு இடையே இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 72 வது ஆண்டு நிறைவின் குறிப்பிடத்தக்க மைல்கல்லை 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதியாகிய நாளைய தினம் குறித்து நிற்கின்றது. இராஜாங்க செயலாளராகிய தாங்கள் எம்முடன் இணைந்துள்ள இன்றைய தினம் உண்மையில் ஒரு மிக முக்கியமான தருணமாகும்.

ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக, ஜனநாயகத்தின் பகிரப்பட்ட விழுமியங்கள் மற்றும் சமூகப் பொருளாதார நோக்குநிலையின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட வலுவானதொரு உறவை எமது இரு நாடுகளும் வளர்த்து வருகின்றன. இராஜதந்திர உறவுகளை முறையாக நிறுவுவதற்கு முன்பிருந்தே, 1880 களிலிருந்து எமது மக்களுக்கிடையேயான உறவுகள் காணப்படுகின்றன.

பல ஆண்டுகளாக, இந்த ஈடுபாடானது கடல்சார் விடயங்கள் உள்ளடங்கலாக அரசியல், பொருளாதார, கல்வி, காவல் மற்றும் பாதுகாப்புத் துறைகளை உள்ளடக்கிய ஒரு பன்முக உறவில் கணிசமாக முதிர்வடைந்துள்ளது. எமது இரு நாடுகளினதும் மக்களுக்கு இடையிலான தொடர்புகளும் சம அளவில் முக்கியமானதாகும்.

இந்த சூழலில், மதிப்புமிக்க அமெரிக்காவின் இராஜாங்க செயலாளரான கௌரவ மைக்கல் பொம்பேயோ ஆகிய தங்களை கொழும்புக்கு அன்பாக வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். COVID-19 தொற்றுப்பரவலால் ஏற்பட்டுள்ள பலமான சவால்களை மீறி இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக தங்களது நேரத்தை அர்ப்பணித்து, தங்களின் உட்பார்வையை பகிர்வதானது இதயத்தை நெகிழச் செய்கின்றது.

அதிமேதகு ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ அவர்களுடனானதும், எமக்கு இடையிலானதுமான பரந்த கலந்துரையாடல்கள், இந்த வருடத்தின் கடந்த மாதங்களில் இலங்கைத் தலைவர்களுடன் முக்கிய அமெரிக்கப் பிரதிநிதிகள் மேற்கொண்ட உரையாடல்களுக்கு ஒரு புதிய உத்வேகத்தை உருவாக்கியுள்ளன.

இராஜாங்க செயலாளரர் அவர்களே, எமது வாழ்க்கை, வாழ்வாதாரங்கள், மற்றும் எல்லைகளைத் தாண்டிய உறவுகளை பாதிக்கும் கற்பனை செய்ய முடியாத அளவிலான COVID-19 தொற்றுப்பரவலினால் உலகம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தற்போதைய தருணத்திலேயே நீங்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளீர்கள்.

இலங்கையின் வெற்றிகரமான சுகாதார முறைக்கு பங்களித்த (கேட்கவில்லை) பொது மற்றும் சமூக சுகாதார முறையை உருவாக்குவதற்கான ஆய்வுக் கற்கையை அமெரிக்காவின் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகம் 1930 களில் நியமித்தது.

இராஜாங்க செயலாளர் அவர்களே, இலங்கை ஆசியாவின் மிகப் பழமையான ஜனநாயக நாடாகும். ஏறக்குறைய 90 ஆண்டுகளாக உலகளாவிய வாக்குரிமையை அனுபவித்துள்ள பிரஜைகளாக நாம் இருக்கிறோம். ஆற்றல்மிக்க கண்ணோட்டத்தில் குறிப்பிட்டால், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற

தேர்தல்களின் இரு மிகப்பெரிய தேர்தல் நடைமுறைகளின் ஊடாக இலங்கை மக்களின் சுதந்திரமான தெரிவுகளை வெளிப்படையாக எதிரொலித்து ஜனநாயக முயற்சிகளும் நடைமுறைகளும் அவர்களுடன் பக்கபலமாக நின்ற காலமும் இலங்கையில் இருக்கிறது.

பொருளாதார முன்னேற்றத்துடன் கூடிய ஸ்திரமான, பாதுகாப்பான நாடொன்றுக்கான எமது முன்னோக்கிய பயணத்தில் இணைந்து கொள்வதற்கு எமது அனைத்து நட்பு நாடுகளுக்கும், குறிப்பாக அமெரிக்காவுக்கு, தெளிவான வாய்ப்பொன்றை வழங்கி ஒற்றையாட்சி நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு, பொருளாதார முன்னேற்றம் ஆகிவற்றை பாதுகாப்பதற்கான மக்களின் ஆணையை இந்த தேர்தல்கள் பிரதிபலிக்கின்றன.

விவசாயம், சுற்றுசூழல், இயற்கை வளங்கள், சுகாதாரம், கல்வி, ஆராய்ச்சி அபிவிருத்தி, வர்த்தகம், மற்றும் மனிதாபிமன உதவிகள் உள்ளிட்ட பரந்தளவிலான துறைகளிலான 2 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பெறுமதியுடைய அபிவிருத்தி உதவிகள் சகிதம் இலங்கையின் மிகப்பெரிய அபிவிருத்தி பங்காளர்களில் ஒருவராக அமெரிக்கா இருக்கிறது. 2019 ஆம் ஆண்டில் 3.1 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதிகளுடன் இலங்கையின் மிகப்பெரிய தனி சந்தையாக அமெரிக்கா தொடர்ந்தும் இருப்பதுடன், தற்போதைய COVID-19 சூழலிலும் கூட சம்பந்தப்பட்ட சந்தை வீழ்ச்சியானது இந்த வருடத்தின் முதல் பாதியில் 1.1 பில்லியன் அமெரிக்க டொலருடன் சிறிய நிலையிலேயே தொடர்ந்தும் இருக்கிறது.

அமெரிக்கா நண்பனாக இருப்பதுடன், கஷ்டமான நேரங்களில் இலங்கைக்கு உதவியுமிருக்கிறது. உங்களது உதவிக்கு நாம் தொடர்ந்தும் கடமைப்பட்டிருக்கிறோம். 2004 ஆம் ஆண்டின் ஆசிய சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இலங்கைக்கான அமெரிக்காவின் உதவி குறிப்பிடத்தக்கதாகும். முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சீனியர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனின் விஜயங்களையும் பின்னரான அவர்களது உதவியையும் நான் நினைவுகூர்கிறேன். அதேபோல், அண்மையில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் மிக அண்மையில் COVID-19 கட்டுப்படுத்தல் ஆகியவற்றிலான உதவிகளையும் நான் நினைவுகூர்கிறேன். குறிப்பாக 9/11 தாக்குதலுக்கு முன்பிருந்து தற்போது வரையும் விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பை தடைசெய்து வைத்திருப்பதற்கு நான் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் உடன் பயணிக்கிறோம் என்ற வகையில், இராஜாங்க செயலாளர் அவர்களே, முக்கிய அமெரிக்க பிரதிநிதிகளுடனான அதிமேதகு ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவினது கலந்துரையாடல்களினதும் சில மாதங்களுக்கு முன்னர் இராஜாங்க செயலாளர் பொம்பேயோவிற்கும் எனக்கு இடையில் இடம்பெற்ற மெய்நிகர் கலந்துரையாடலினதும் தொடர்ச்சியாகவே இன்றைய கலந்துரையாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொருவரும் மற்றையவரது முன்னுரிமைகளை புரிந்துகொள்வதற்கும் தத்தமது தரப்புகளை பகிர்வதற்கும் மற்றும் ஒத்துழைப்புக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் இருதரப்பு ஈடுபாடுகளை மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை பரிசீலிப்பதற்கும் இரு தரப்புகளுக்குமான வாய்ப்பொன்றை அது அர்த்தப்படுத்துகிறது.

எமது இருதரப்பு ஈடுபாடுகளை மேலும் வலுவானதாக உருவாக்கும் தற்போதைய நிலையில், அமெரிக்க-இலங்கை பங்காண்மை கலந்துரையாடலின் அடுத்த அமர்வுகளை 2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில் கூட்டுவதற்கும் பொருளாதாரம், பாதுகாப்பு, மற்றும் தீவிரப்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு ஊடான ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான முன்னேற்றம் பற்றியும் நாம் இணங்கியுள்ளோம்.

வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கை கூட்டுப் பேரவையின் அடுத்த அமர்வுகளும் சாத்தியமான விரைவானதொரு காலவரையறைக்குள் கூட்டப்படவுள்ளன. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், இணைய பாதுகாப்பு, விவசாயம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், புத்தாக்கம், மற்றும் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வணிகங்கள், மற்றும் காலநிலை மாற்றம் போன்ற துறைகளில் எமது இருதரப்பு ஈடுபாடுகளை விரிவுப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகவும் இது கருதப்படுகிறது.

இறையாண்மையுடைய, சுயாதீனமான, சுதந்திரமான நாடென்ற வகையில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையானது நடுநிலையானதாகவும் அணி-சேராததாகவும் மற்றும் நட்பு

ரீதியானதாகவுமே தொடர்ந்தும் இருக்கும். எமது மூலோபாய இருப்பிடத்தின் மூலம் வரும் வாய்ப்புகள் மற்றும் பொறுப்புகளை உணர்ந்து, எமது கடல் மற்றும் வான் பகுதிகளில் போக்குவரத்து சுதந்திரத்தை பேணுவதனதும் அத்துடன், கடல்வழி தொடர்பாடல்கள் மற்றும் கடலுக்கு அடியிலான கம்பிவடங்களை பாதுகாப்பதனதும் முக்கியத்துவத்தை நாம் காண்கிறோம்.

கடல் சட்டம் தொடர்பான ஐ.நா. சாசனம் உள்ளிட்ட சர்வதேச சட்டங்களை சகல நாடுகளும் கடைபிடிக்கவும் மதிக்கவும் வேண்டும் என்று நாம் நம்புகிறோம். இலங்கை முன்னேற்றமடைவதற்கு ஆர்வமாக இருக்கின்றது என்ற வகையில், சாத்தியமான பன்முக கடல்சார் ஒத்துழைப்பு பற்றிய கருத்துக்களை நாம் பகிர்கிறோம். இராஜாங்க செயலாளர் பொம்பேயோவின் விஜயமும் கலந்துரையாடல்களும் எமது நட்புறவுகளை மேலும் மேம்படுத்தியுள்ளன. நான் மீண்டுமொரு முறை எனது மனமார்ந்த நன்றிகளை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன், இராஜாங்க செயலாளர் பொம்பேயோ அவர்களே.

இறுதியாக, இராஜாங்க செயலாளர் பொம்பேயோவிற்கும் அவருடன் இந்த விஜயத்தில் பங்கு கொண்டுள்ள திருமதி. பொம்பேயோவிற்கும் இலங்கையில் அவர்கள் இருக்கும் காலம் இனிமையானதாக இருப்பதற்கும் அடுத்து வரும் நாட்களிலான ஆசிய பயணம் பாதுகாப்பானதாக அமையவும் நான் வாழ்த்துகிறேன்.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** நன்றி.

**வெளிநாட்டமைச்சர் குணவர்தன:** இலங்கை மக்களின் சார்பாக நான் உங்களை ஆயுபோவான் என வாழ்த்துகிறேன்.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** மிக்க நன்றி.

**வெளிநாட்டமைச்சர் குணவர்தன:** நான் இராஜாங்க செயலாளர் அவர்கள் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகிறேன்.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** நன்றி, அமைச்சர் அவர்களே.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** நன்றி. நன்றி, அமைச்சர் அவர்களே. அனைவருக்கும் வணக்கம். இங்கு கொழும்புக்கு வர கிடைத்தமை அருமையான விடயமாகும். நீங்கள் கூறியதைப் போன்று இது உண்மையில் மிகவும் விசேடமானது. ஏனெனில், எமது இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜாதந்திர உறவுகளின் 72 ஆண்டுகள் நிறைவுக்கு இன்னும் ஒரு தினமே எமக்கு எஞ்சியிருக்கிறது. எம் ஒவ்வொருவக்கும் இது குறிப்பிடதக்கதொரு ஆண்டுநிறைவாகும்.

வெளிநாட்டமைச்சரும் நானும் சிறப்பான கலந்துரையாடலொன்றை மேற்கொண்டோம். அவரது மீள் நியமனம் குறித்து வாழ்த்துவதற்கு எனக்கு சந்தர்ப்பொன்று கிடைத்தது – அற்புதம். இன்று காலை சற்று முன்னதாக ஜனாதிபதி ராஜபக்ஷவுடனும் மிகவும் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலொன்றை மேற்கொண்டேன்.

இரு சந்திப்புகளிலும் எனது ஒட்டுமொத்த செய்தி தெளிவானதாக இருந்தது: ஜனநாயக, அமைதியான, சுபீட்சமான, மற்றும் முழுமையான இறையாண்மையுடைய இலங்கையுடனான எமது பங்காண்மையை வலுப்படுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது. உதாரணமாக, எமது புதிய தூதரகம் நிறைவடையும் தருவாயில் உள்ளது. அது இந்த நாட்டுக்கும் இலங்கை மக்களுக்குமான எமது உறுதிப்பாட்டின் அடையாளமொன்றாகும் என்பதுடன், சீனாவின், வூஹானிலிருந்து ஆரம்பித்த தொற்றுப்பரவலை தோற்கடிப்பதிலான எமது ஒத்துழைப்பு பற்றி பேசுவதிலும் நிச்சயமாக நாம் நிறைய நேரமொன்றை செலவிடுகிறோம்.

6 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான COVID உதவியை அமெரிக்கா தற்போது இலங்கைக்கு அன்பளிப்பு செய்துள்ளதுடன், இந்த தொற்றுப்பரவலின் ஆரம்பத்தில் இலங்கை தொழிற்சாலைகளும் ஆடை உற்பத்தியாளர்களும் உயர்தரமான தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களுக்கான நூற்றுக்கணக்கான அனுப்பாணைகளை விரைவாக நிறைவுசெய்தனர். அமெரிக்கர்களின் உயிர்களை காப்பாற்றிய இந்த உற்பத்திகளுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். மிக்க நன்றி.

இந்த வைரஸை தோற்கடிப்பதற்கும் எமது மக்களுக்குக்கும் உண்மையில் உலகின் அனைத்து மக்களுக்கும் பயனளிப்பதற்கும் தடுப்பூசிகள் மற்றும் சிகிச்சைமுறைமைகளை உருவாக்குவதற்கு எமது தனியார்துறையினருடன் ஜனாதிபதி ட்ரம்ப் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார். தற்போதும் எதிர்காலத்திலும் எமது பொருளாதார நிலையை மீட்டெடுப்பதற்கு தனியார்துறையினரின் சக்தி எமக்கு தேவையாக இருக்கும் என்பதுடன், இந்த விடயம் தொடர்பில் இலங்கை மக்களுடன் பணியாற்ற நாம் எதிர்பார்க்கிறோம்.

இதைப் பற்றி நாம் அதிகம் பேசினோம். எமது பொருளாதார உறவுகள், தற்போது இங்கிருக்கும் சிறந்த அமெரிக்க நிறுவனங்கள் பற்றி நாம் பேசினோம். Coke மற்றும் Oracle மற்றும் IBM போன்ற வர்த்தக நாமங்கள் உயர்தரமான தொழில்களுக்கு இங்கு சான்றளிக்கின்றன – அல்லது என்னை மன்னிக்கவும், உயர்தரமான தொழில்களை உருவாக்குகின்றன. இந்த அமெரிக்க நிறுவனங்கள் இந்த பூமியில் இருக்கும் மிகவும் நம்பகரமான பங்காளர்களாகும். அவர்கள் சட்டத்துக்கு பொறுப்புக்கூறுபவர்களாக இருக்கின்றனர், வெளிப்படையானவர்களாக இருக்கின்றனர். அவர்கள் இயங்கும் சமூகங்களுக்கு அவர்கள் சொத்துகளாக இருக்கின்றனர்.

மற்றும் நான் இன்று கூறியதைப் போன்று, நல்லாட்சி, கொள்கையில் வெளிப்படைத்தன்மை என்பன மேலும் பல அமெரிக்க முதலீடுகளை தொடர்ச்சியாக கவரும். ஆசியாவின் மிகப் பழமையான ஜனநாயக நாடென்ற வகையில் அந்த அடிப்படைக் கொள்கைகள் இலங்கையின் வரலாறு, அதனது மரபுரிமைகளுடன் ஆழமாக ஒத்துப்போகின்றன.

எமது கூட்டுப்பயிற்சிகளுக்கு மேலதிகமாக, அமைச்சர் ஏற்றுகொண்டதைப் போன்று, உலகின் மிக முக்கியமான கடல்வழிப் பாதைகளில் சிலவற்றை திறந்த வைத்திருப்பதற்கு உதவும் எமது பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாகவும் நாம் விரிவான கலந்துரையாடலொன்றை மேற்கொண்டோம். நான் பயின்ற கற்றல் நிறுவனமான அமெரிக்க இராணுவ அகாடமி (West Point) போன்ற அமெரிக்க கற்றல் நிறுவனங்களில் இலங்கை அதிகாரிகள் பயிற்சிகளை பெற்றுள்ளதையிட்டு நான் பெருமைபடுகிறேன் என்பதுடன், தற்போது உங்களது கடற்பரப்பில் இலங்கை கடற்படையின் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் இரண்டு கடலோர காவற்படை கட்டர் கப்பல்களை அமெரிக்கா அன்பளிப்பு செய்துள்ளமை குறித்தும் நான் பெருமையடைகிறேன்.

உண்மையில், உறுதியானதும் இறையாண்மையுடையதுமான இலங்கையானது உலக அரங்கில் அமெரிக்காவிற்கு சக்திவாய்ந்த மற்றும் மூலோபாய பங்காளியாகும். இது சுதந்திரமானதும் திறந்ததுமான இந்தோ-பசுபிக் பிராந்தியமொன்றுக்கு கலங்கரை விளக்கமொன்றாக இருக்க முடியும்.

அவதானியுங்கள், இது சீனா முயற்சிப்பதற்கு முற்றிலும் நேர் எதிர்மாறானது. மோசமான ஒப்பந்தங்கள், இறையாண்மை மீறல்கள் மற்றும் நிலம் மற்றும் கடலிலான சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகள் ஆகியவற்றிலிருந்து சீன கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு வேட்டைக்காரனாக நாம் பார்க்கிறோம். எனினும், அமெரிக்கா வித்தியாசமான வழியொன்றிலேயே அணுகுகிறது. நண்பனாகவும் பங்காளியாகவுமே நாம் அணுகுகிறோம்.

இறுதியாக, 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் இனால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட ஐந்து இடங்களில் ஒன்றான புனித அந்தோனியார் சந்நிதானத்திற்கு நான் இன்று பிற்பகல் செல்லவுள்ளேன். அங்கு சென்று பார்வையிட நேரமொன்றை எடுத்துக்கொள்வது எனக்கு முக்கியமாகும். ஐந்து அமெரிக்கர்கள் உட்பட தீய பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோருக்கு எனது மரியாதையை செலுத்துவதற்கு இன்னும் சிறிது நேரத்தில் எனக்கு வாய்ப்பொன்று கிடைக்கும். அமெரிக்கர்களையும் தமது சொந்த இலங்கை மக்களையும் கொன்றவர்களை நீதிக்கு முன் நிறுத்த இலங்கையர்களுக்கு உதவுவதற்கு இராஜாங்க திணைக்களம் கணிசமான பயங்கரவாத எதிர்ப்பு உதவிகளை வழங்கியுள்ளது என்பதில் நான் பெருமைப்படுகிறேன். இலங்கையர்கள் என்றென்றும் கைவிட்டுச் செல்ல தயாராக இருக்கும் ஒரு வகையான மதப்பிரிவுணர்ச்சியையே இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. தங்களது மனித உரிமைகள் மதிக்கப்படும் அமைதியான தேசமொன்றையே பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் முஸ்லிம் என அனைத்து பின்னணிகளையும் சேர்ந்த இலங்கையர்களும் விரும்புகின்றனர்.

தமக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்லாது தாம் அனைத்து பிரஜைகளினதும் ஜனாதிபதி என்று தமது தேர்தல் வெற்றியுரையின் போது ஜனாதிபதி ராஜபக்ஷ கடந்த வருடம் தெரிவித்தார். எமது

இரு நாடுகளும் முன்னோக்கி நகர்கின்றன என்ற வகையில், அந்த வார்த்தைகள் உண்மையாக தக்கவைக்கப்படும் என்று அமெரிக்கா எண்ணுகிறது. பொறுப்புக்கூறல், நீதி, மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கு உறுதியான, அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகளை எடுக்க வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை பூர்த்திசெய்யும் என்று நாம் முழுமையாக எதிர்பார்க்கிறோம்.

தோளோடு தோளாக நாம் அனைவரும் ஒன்றாக நிற்போம் அமைச்சர் அவர்களே. நாம் செய்யும் போது எமது மக்களுக்காக நாம் அடையக்கூடிய சிறந்த சிலவற்றை நாம் கண்டுள்ளோம். ஜனநாயக விழுமியங்களால் குறிக்கப்பட்ட எமது பங்காண்மையின் வலிமையினால் ஒன்றுபட்டு மேலும் பலவற்றை செய்வோம்.

இன்று என்னை இங்கு உபசரித்தமைக்கு நன்றி, அமைச்சர் அவர்களே.

**வெளிநாட்டமைச்சர் குணவர்தன:** நன்றி.

**மத்தியஸ்தர்:** ஊகங்களிடமிருந்தான கேள்விகளுக்கு நாம் இப்போது வாய்ப்பை வழங்குவதுடன், தமது கேள்விகளை முன்வைக்குமாறு உள்நாட்டு ஊடகங்களை கேட்டுக்கொள்கிறோம்.

**கேள்வி:** இந்த வாய்ப்பளிக்கப்பட்டமைக்கு மிக்க நன்றி. எனது பெயர் சவிக்க குணசேகர. நான் இலங்கை (கேட்கவில்லை) நியூஸை பிரதிநிதித்துவப்படுத்துகிறேன்.

இராஜாங்க செயலாளர் பொம்பேயோ அவர்களிடம் நான் எனது கேள்வியை எழுப்புகிறேன்: அமெரிக்கா தேர்தலொன்றுக்கு செல்லவுள்ள தருணமொன்றில் விஜயம் செய்வதற்கு நீங்கள் ஏன் இலங்கையை தெரிவுசெய்தீர்கள்? சீனாவுக்கு எதிரான கூட்டணியொன்றை நோக்கி இலங்கையை நகர்த்துவது தான் உங்களது இந்த விஜயத்தின் நோக்கமா? அதாவது, இலங்கையில் நாற்கரப் பாதுகாப்பு பேச்சுவார்த்தை (Quad) குழுவின் ஊடாக எம்.சி.சி., சோபா, போன்ற புதிய ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதன் மூலம் பெய்ஜிங்கின் செல்வாக்கை ஈடுசெய்வதற்கு அமெரிக்கா முயற்சிக்கிறதா?

அத்துடன், எமது தற்போதைய இராணுவ தளபதியும் எமது நாட்டிலுள்ள யுத்த வெற்றிவீரர்களில் ஒருவருமான லெப்டினனட் ஜெனரல் சவேந்திர சில்வா அமெரிக்காவுக்குள் உட்பிரவேசிக்க முடியாதவாறு சுயாதீனமாக உறுதிப்படுத்தப்படாத தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் அனைவரும் தடை விதித்துள்ளீர்கள். அதன் தற்போதைய நிலை என்ன? லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மீதான பயணத்தடை விதிப்பை ஜெனீவா தீர்மானத்தின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்யுமாறு அரசாங்கம் உங்களிடம் கோரியதா? நன்றி.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** நல்லது. நன்றி. இதில் மூன்று கேள்விகள் இருப்பதாக நினைக்கிறேன். கடைசி கேள்வியானது அமெரிக்காவில் இருக்கும் சட்ட நடைமுறை சம்பந்தமானதாகும். அதை நாம் எப்போதும் தொடர்ந்து மீளாய்வு செய்கிறோம். தொழில்நுட்ப ரீதியாகவும், உண்மை அடிப்படையிலும், மற்றும் சட்டரீதியாகவும் நாம் அதை சரியாக புரிந்துக்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ள நாம் விரும்புகிறோம். நாம் அதைத் தொடந்தும் செய்வோம்.

உங்களது முதலாவது கேள்வி காலகட்டம் பற்றியது என்று நினைக்கிறேன். வெளிநாட்டமைச்சர் நினைவூட்டடினார். நான் உங்களுக்கு கடமைப்பட்டிக்கிறேன். முன்னதாகவே நான் இங்கு வருவதற்கு திட்டமிட்டிருந்ததுடன், உலகம் முழுவதிலுமான நிகழ்வுகள் நான் அந்த சந்தர்ப்பத்தில் இங்கு வருவதை இயலாமல் செய்துவிட்டன. இதுவே அதை என்னால் செய்துக்கொள்ளக் முடிந்த காலப்பகுதியாக இருந்தது. நான் இங்கு வந்திருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். எமது உறவு 72 ஆவது ஆண்டு நிறைவை எட்டும் தருணத்தில் இது மிகவும் அற்புதமான வாய்ப்பாகும். இங்கு வருகை தந்திருப்பதை எனக்கு முக்கியமான தருணமொன்றாக நான் கருதுவதுடன், அதை என்னால் செய்ய முடிந்ததையிட்டு நான் சந்தோசப்படுகிறேன்.

உங்களது இறுதி கேள்வியானது நாம் இங்கு எதை சாதிக்க முயற்சிக்கிறோம் என்பது பற்றியதாகும். இலங்கை மக்களுக்கு இறையாண்மையும் சுயாதீனத்தன்மையும் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அவர்கள் வெற்றிப்பெற வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அவர்களுக்கு நிலையான அபிவிருத்தி கிடைப்பதை நாம் விரும்புகிறோம். நண்பன் மற்றும் பங்காளி என்ற வகையில் அமெரிக்கா சரியாக அதையே வழங்குகிறது என்று நாம் கருதுகிறோம். அதுவே எமக்கு அவசியம். பகிரப்பட்ட நோக்கமொன்று எமக்கு இருக்கிறது. ஜனநாயக நாடுகளுக்கு அது

எப்போதும் இருக்கும், இல்லையா? ஆகவே, நான் பயணிப்பேன் - நான் இந்தியாவுக்கு சென்றேன், தற்போது இங்கு இருக்கிறேன், இன்று பிற்பகல் நான் மாலைத்தீவில் இருப்பேன், இந்தோனேசியா நோக்கியும் நான் பயணிப்பேன். சுதந்திரமான மற்றும் திறந்த கடல்வழிப் பாதைகள், வர்த்தகத்துக்கான ஆற்றல் ஆகியவற்றிற்கும் மக்கள் அவர்கள் விரும்பிய இடத்திற்கு செல்வதற்கும் ஜனநாயக நாடுகள் பகிரப்பட்ட நோக்கமொன்றை கொண்டுள்ளன என்பது எமக்குத் தெரியும்.

இவையே இலங்கை மக்கள் அமெரிக்க மக்களுடன் பகிரும் நோக்கங்களாகும். ஆகவே, அந்த விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதாகவும், அமெரிக்க தனியார்துறை நிறுவனங்கள் இங்குள்ள வாய்ப்புகளை கண்டு இங்கு வந்து முதலீடு செய்து இலங்கையர்களுக்கு பயிற்சியளித்து அந்த சமூகங்களையும் கட்டியெழுப்பக் கூடியதாக எமது உறவை நாம் தொடர்ந்தும் கட்டியெழுப்பவும் அபிவிருத்திசெய்யவும் கூடிய சிறந்த வழிகளை கண்டறிவதுமாகவுமே எனது இன்றைய விஜயம் அமைந்திருந்தது. இந்த வகையான விடயங்களை தான் அமெரிக்கா வழங்குகிறது. இங்கு வித்தியாசமான நோக்கமொன்று இருக்கிறது. சீனர்கள் மிகவும் வித்தியாசமான நோக்கமொன்றை கொண்டுள்ளனர்.

தொடர்ந்தும் சுயாதீனமாக இருப்பதற்கான தங்களது இறையாண்மை உரிமைகளை நிறைவேற்றுவதற்கும் நீங்கள் அனைவரும் நடத்தியதைப் போன்ற தேர்தல்களை நடத்துவதற்கான சுதந்திரத்தை கொண்டிருப்பதற்குமான ஆற்றலை இலங்கை மக்கள் கொண்டிருப்பதை உறுதிசெய்ய நாம் விரும்புகிறோம். ஜனநாயக நாடுகள் ஒன்றுபட்டு பணியாற்றும் விடயங்கள் அவைதான். நாம் பகிரும் நோக்கங்களும் அவை தான். அதனால் தான் இன்று இங்கு வருகைதர முடிந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி. உங்களது அனைத்து கேள்விகளுக்கும் நன்றி.

**மத்தியஸ்தர்:** சரி. அமெரிக்க ஊடகங்களிலிருந்து நாம் VOA இன் Nike Ching ஐ தெரிவுசெய்கிறோம்.

**கேள்வி:** இன்றைய நாள் சிறப்பானதாக அமையட்டும், வெளிநாட்டமைச்சர் அவர்களே. கொழும்பு உண்மையில் அழகியதொரு இடம். இங்கு வந்திருப்பதில் மகிழ்ச்சி. பல ஆண்டுகளின் பின்னர் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்வது இது முதலாவது சந்தர்ப்பமா என்று நான் கேட்கலாமா? இந்த பிராந்தியத்தில் அதிக அமெரிக்க பிரசன்னத்தை நீங்கள் வரவேற்கிறீர்களா? (கேட்கவில்லை) அமெரிக்க-இலங்கை உறவானது சீனாவுடனான இலங்கையின் உறவை உறுத்துவதாக இருக்கிறதா? மிக்க நன்றி.

**வெளிநாட்டமைச்சர் குணவர்தன:** நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, இலங்கை-அமெரிக்க உறவுகளானது 72 ஆவது ஆண்டுநிறைவை அடைகிறது. எம்முடன் இருப்பதற்கு இராஜாங்க செயலாளர் இந்த ஆண்டுநிறைவை தெரிவுசெய்தமை மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. நாம் முன்னோக்கி வந்த நாம் நீண்டகால ஒத்துழைப்புடன் எதிர்காலத்திற்கும் பயணிக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

இன்று இராஜாங்க செயலாளர் வருகை தந்திருப்பது போலவே, எதிர்காலத்திலும் பல அமெரிக்க அதியுயர் பிரமுகர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வார்கள். நான் ஏற்கனவே கூறியதைப் போன்று இலங்கையானது சமாதானத்திற்கு உறுதிபூண்ட நடுநிலையான, அணிசேரா நாடொன்றாகும். எமது உறவுகளை அமெரிக்காவுடனும் ஏனைய நாடுகளுடனும் அந்த கொள்கைகளின் அடிப்படையில் தொடர்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** அனைவருக்கும் நன்றி.